# அரசாங்க அறிவித்தல்

## மதுவரிக் கட்டளைச்சட்டம்

## மதுவரி அறிவித்தல் இலக்கம் 11 /2018

திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் 2018 ஜனவரி மாதம் 18 ஆம் திகதிய 2054/41 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 03/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் அட்டவணையில் இல. 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளு தவறணைகளில் விற்பனை நேரங்கள் 2018 யூன் மாதம் 13 ஆம் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

மங்கள சமரவீர
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

2018, யூன் மாதம் 13 ஆம் திகதி
கொழும்பு - 01
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,

<u>அட்டவணை</u>

| 1 ஆம் நிரல் | | II ஆம் நிரல் |
|---|---|---|
| உரிம வகை | | திறந்திருக்க வேண்டிய நேரங்கள் |
| (i) | கள்ளுத் தவறணை | மு.ப. 11.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை மற்றும் பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 8.00 மணி வரை |
| (ii) | கள்ளுத் தவறணை( கூட்டுறவு முறையின் கீழ் செயற்படும்) | மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 9.00 மணி வரை |

2 பொருட்கோடள் : ''*கூட்டுறவு முறையின் கீழ்*'' என்பது மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கொத்தணிகள் என கருத்திற்கொள்ளப்படுகிறது.